**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது**

# மண்டலப் பூசையின் அறிவுக்கொடையும், அருட்கொடையும்!

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 கார்த்திகை மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"மண்டலப் பூசை கருத்துப் பரிமாற்ற விளக்க மடல்"** - குருதேவர் அவர்கள் பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்கள் மூலம் அனைத்து அடியான்களுக்கும், அடியாள்களுக்கும் 16/09/1985இல் விடுத்த விளக்க மடல்.
2. **"செயல்நலம் பாராட்டுத் திருவோலை"** - குருதேவர் அவர்கள் காரைக்குடிச் சித்தரடியான் திரு இராமானுசதாசு அவர்களுக்கு 01/08/1985இல் விடுத்த திருமடல்.
3. **"அன்பு விளக்கச் செயல் ஊக்கத் திருவோலை"** - குருதேவர் அவர்கள் ஒரிசாவிலிருந்த சித்தரடியான் திரு சண்முகானந்தன் அவர்களுக்கு 14/09/1985இல் விடுத்த திருவோலை.
4. **"கபாடபுரத்துக் கருவூரூரின் பரிகாரப் பூசை விளக்க மடல்"** - குருதேவர் அவர்கள் அருளாட்சித் தாக்கீதாக 30/12/1984இல் அனைவருக்கும் அனுப்பிய மடல்.
5. **"அருளுலக இருளகற்றும் திருவிழா"** - 08/11/1984 முதல் 10/11/1984 வரை நிகழ்த்தப்பட்ட குருதேவர் அவர்களின் காரைக்குடிச் சுற்றுப்பயணத்திற்காக வழங்கிய அறிவிக்கையின் நகல்.
6. **"ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூரின் மதுரை வருகை"** - 20/09/1985 முதல் 23/09/1985 வரை நிகழ்ந்த குருதேவர் அவர்களின் மதுரைச் சுற்றுப்பயணத்திற்காக வழங்கிய அறிவிக்கையின் நகல்.
7. **"அருளாட்சி அமைக்க அறைகூவல் விடுக்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் பற்றிய விளக்கம்"** - ஒரிசா சுற்றுப்பயணத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அறிவிக்கையின் ஒரு பகுதி.

ஓம் எல்லாம் வல்ல எல்லாமாயுள்ள குருவே துணை

# மண்டலப் பூசைக் கருத்துப் பரிமாற்ற மடல்

பொன்னேரி,
16/9/85.

பேரன்புமிக்க பரமாச்சாரியார் அவர்களுக்கு, **மண்டலப் பூசைக் கருத்துப் பரிமாற்ற மடல்**.

1) அனைத்து அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், விருப்பாளர்களுக்கும் [ இவர்களே மதத்துறையில் ஆறுவகைச் சமயத்தார் என்றும், தத்துவத் துறையிலே ஆறுவகைச் சமுதாயத்தார் என்றும் குறிக்கப்படுகின்றனர். சித்தர்களே முதல் மூவரை **'முத்தரத்தார்'** என்று நெஞ்சப் (மனப்) பக்குவத்தைக் குறிக்கும் சொல்லாலும்; பின் மூவரை **'முத்திறத்தார்'** என்று சிந்தையின் திறத்தின் அடிப்படையிலும் குறிக்கின்றனர். இதேபோல், ஐந்திரத்தார், ஐந்திறத்தார் என்ற இரண்டு உண்டு. நினைவிற் கொள்க! ] விடுக்கப்படும் **மண்டலப் பூசைக் கருத்துப் பரிமாற்ற மடல்**.

2) தொழில் செய்பவர்களுக்கு அத்தொழில் செய்யப் பயன்படும் கருவிகளின் வகைகளும், தரங்களும், திறங்களும் தெரிந்திருக்க வேண்டும். வியாபாரம் செய்கின்றவர்களுக்கு நாணயங்களின் வகைகளும், மதிப்புக்களும்; அவர்கள் வியாபாரம் செய்கின்றவைகளின் வகைகளும், தரங்களும் தெரிந்திருக்க வேண்டும். இதேபோல், மொழி, இனம், நாடு என்ற மூன்றுக்கும் உழைக்கப் புறப்படுபவர்களுக்கு வரலாறு,

இலக்கியம், நிகழ்கால நாட்டுநடப்பிலுள்ள பிறச்சினைகள் தெரிந்திருக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற முக்கூட்டினால் உண்டான மனிதனின் முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு என்ற மூன்றின் பிரதிபலிப்பாக நிகழும் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என்ற மூன்றுக்கும் தொண்டு செய்யப் புறப்படுகின்றவர்களுக்கு அவரவர் தாய்மொழியில் உள்ள கதைகள், காதைகள், கவிதைகள், கீதைகள், புராணங்கள், இதிகாசங்கள், அருட்துறை வாசகங்கள், வாக்குகள், வாக்கியங்கள், ... முதலியவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் முதன்மையான, மூலமான சொற்களாவது தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, உணர்வுப் புரட்சி ... முதலியவற்றின் மூலம் செயல் மறுமலர்ச்சியை விளைவித்திட முடியும்.

இதற்கு ஒரு பெரிய, நெடிய, அந்தந்த நாட்டுக்குரிய வரலாற்றுப் பாரம்பரியமும், மதப் பாரம்பரியமும், சமுதாயப் பாரம்பரியமும், இலக்கியப் பாரம்பரியமும், தத்துவப் பாரம்பரியமும் உடைய தலைமையின் ஆக்கப்பூர்வமான முயற்சிகளால் தேவையான அடிப்படைப் பயிற்சிகளை வழங்கித் தயாரிக்கப்படும் தொண்டர்கள் தேவை! இப் பேருண்மையின் அடிப்படையில்தான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பாடுபட்டு இ.ம.இ.யும், அதன் பன்னிரண்டு அமைப்புக்களும் காற்றில் தூவிய விதைகள் காடுமேடெல்லாம் நாலாபக்கமும் சிதறி விழுந்து கண்டபடி முளைப்பது போல் காட்டுப்பயிராக விளைந்திருக்கின்றன.

அதாவது, அவசர அவசியத்தின் காரணமாகவும் 36 ஆண்டுகள் பயிற்சியிலும், முயற்சியிலும்; கடலோடி, காடோடி, நாடோடி வாழ்க்கையில் செலவிட்டு பொறுமையிழந்து விட்ட காரணத்தாலும் மேற்படி

அமைப்புக்களை வேலியிட்டு விவசாயம் செய்த பயிர்களாக்க முடியாமல் போய்விட்டது. இது தவறில்லை. தேவையின் காரணமாக விளைந்ததே! இன்றைக்கு நாடு தழுவி அருட்பயிர்களின் பயன்களையும், தேவைகளையும் உணர்ந்து விட்டார்கள்.

அதாவது, காட்டிலுள்ள பழமரங்களையும், பூச்செடிகளையும், காய்கறிக் கிழங்கு வகைகளையும் நாட்டுக்குள் கொண்டுவந்து நஞ்சைகளிலும், புஞ்சைகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் தேவை கருதி பயிர் செய்ய ஆரம்பித்திட்டது போல்; சித்தர்களின் அரிய, பெரிய, உயரிய, புரியாத செயல்திட்டங்களையும்; அச்சத்துக்கும் கூச்சத்துக்கும் மாச்சரியத்துக்குமுரிய நெறிமுறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், செயல்விதிகளையும் பரப்புபவர்கள், போற்றுபவர்கள், விளக்குபவர்கள், பயிற்சி செய்பவர்கள் நாடெங்கும் தோன்றி விட்டார்கள்.

எனவே, நாம் சில நிறுவன, நிர்வாகக் கட்டமைப்புக்களையும், செயல்ஒழுங்குகளையும், விதிமுறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் தலைமையின் துணையோடு உருவாக்கியே தீர வேண்டும். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக!

3) பலபேர் நமது வரலாறு என்ன? இலக்கிய வளம் என்ன? செயல் சித்தாந்தம் என்ன? மத மறுமலர்ச்சிக்குப் பிறகு செய்யப்போகும் புரட்சி செயல்திட்டங்கள் என்ன? என்ன? என்ன? இன்றுவரை நாம் இருட்டடிப்புச் செய்யப்படுவதற்குக் காரணங்கள் என்னென்ன? உண்மையில் இந்துமதத்தின் அடிப்படையான மூலநூல்கள் எவை? இந்துமதத்தின் மூலக் கோயில்கள் எவை? அடிப்படையான வாழ்வியல் நடைமுறைகள் என்னென்ன? இந்துமதத்தின் தலைவர்கள் யார்? யார்? இந்துமதத்துக்கு எப்பொழுது? ஏன்? எப்படி? எவரெவரால் என்னென்ன காலக்கட்டத்தில் என்னென்ன வீழ்ச்சிகள் ஏற்பட்டன?

இந்துக்கள் அடைந்துள்ள தாழ்ச்சிகள் என்ன? இந்துக்கள் தாழ்ச்சியிலிருந்து மீட்சி பெற முடியாமல் தடுக்கின்ற சூழ்ச்சிகள் என்னென்ன? அவற்றை முறியடிக்கக் கூடிய தரமும், திறமும், திரமும் உடைய செயல்திட்டங்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் தோன்றவேயில்லையா? தோன்றித் தோன்றி தோற்றுப் போயினவா? இன்றைக்கு நம்மிடம் மட்டும் நமது முன்னோர்களின் தோல்விகளையும் வெற்றியாக்கக் கூடிய தத்துவமும், சித்தமும், செயல் சித்தாந்தமும் இருக்கின்றனவா? நாம் ஏன் நமது போர்முறை வியூகங்களையும், வெற்றிக்குப் பிறகு செய்யப் போகும் செயல்திட்டங்களையும் அறிவித்து செயல்படக் கூடாது? ... என்ற ஐய வினாக்களும் எழுந்திருக்கின்றன, மிகுந்திருக்கின்றன.

இவைதான் இன்றைய இளைஞர்கள் முதல் முதியோர் வரை பெற்றிருக்கும் அறிவுப் பசியும், தாகமும். ஆனால், இந்தத் தாகத்தையும், பசியையும் தணிக்கப் போவது எது? எப்படி? எப்பொழுது? இவற்றைத் தணிக்கின்ற பணிதான் உண்மையிலேயே அருட்படை திரட்டும் பணியாக இருக்கும். அதாவது, பதினெண்சித்தர்களின் குருபாரம்பரிய உறுதிமொழிகளின்படி; **‘என் அறிவு விழித்த நிலையில்’, ‘என் சிந்தை தெளிந்த நிலையில்’, ‘என் நெஞ்சம் உணர்ந்த நிலையில்’, ‘நான் முழுமையாக விரும்பி நம்பி ஏற்றுக் கொண்ட நிலையில்’, ‘நான் தலைமையை முழுமையாக ஒப்புக் கொண்ட நிலையில்’, ‘நான் எனக்குரிய அனைத்தையும் காணிக்கையாக வழங்கிய நிலையில்’;** அதாவது, பதினெண்சித்தர்கள் எதையும் மந்திர மாயங்களால், அற்புதங்களால், வியத்தகு சித்திச் செயல்களால் பரப்ப வேண்டும் என்று நினைத்துச் செயல்படவில்லை என்ற இப்பேருண்மைகளைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக!

4) பதினெண்சித்தர்கள், தாங்கள் வழங்கிய **மெய்யான இந்துமத**த்தை 'விஞ்ஞானப் பூர்வமானது', 'பகுத்தறிவுப் போக்குடையது', 'அகஞான புறஞான விளக்கமுடையது', 'மெய்ஞ்ஞானப் பயிர் விளைவிக்கும் வித்துக்களைப் போன்றது', 'உலகியல் நடைமுறைகளுக்கு உகந்தது', 'மனித உணர்வுகளுக்கு நிறைவும் நிம்மதியும் இன்பமும் தருவது', 'மனித அறிவுக்கு விருந்தாகவும் மருந்தாகவும் இருப்பது', 'தனிமனித வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் வேலியாக இருப்பது', 'சமய வாழ்வுக்கு உரமாக இருப்பது', 'அரசியல் வாழ்வுக்கு ஈரம் நிறைந்த வீரமாக இருப்பது', 'இலக்கியத்திற்கும் கலைகளுக்கும் உயிரோட்டமாக இருப்பது', ... என்ற கருத்து விளக்கங்கள்தான் இதுவரை யாருமே இந்துமதத்திற்கு வழங்கிடாதவை. இக் கருத்து விளக்கக் கலைச் சொற்றொடர்களே (The Technical Definitions) இந்துமதத்தை விளக்குவன.

ஆனால், கலியுகத்தில் இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்களுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் தொடர்பே இல்லாதவர்களும், விரோதப் போக்குடையவர்களும், துரோகப் போக்குடையவர்களுமே இந்துமதத்துக்குத் தலைவர்களாகி விட்டார்கள். எனவேதான், **பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் முயற்சிகள் அனைத்தும் சிதைந்தும், சீரழிந்தும், நலிந்தும், மெலிந்தும், பாழடைந்தும், பயனற்றும் கிடக்கின்றன. இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலையில் நாம் என்னென்ன செய்யப் போகின்றோம் என்ற செயல் திட்டங்களை வெளியிடுவது தற்கொலைக்குச் சமமே!** ஆனாலும், நம்மவர்கள் நடந்து கொள்கின்ற நடைமுறையைக் காணும்போது அவற்றை வெளியிட்டே ஆகவேண்டும் என்ற நிலை உருவாகி விட்டது.

அதாவது, உலகியலுக்கு ஒத்து வராத அனைத்துக் கருத்துக்களையும், நடைமுறைகளையும், செயல்திட்டங்களையும், செய்திகளையும், ... நம்மை

முழுமையாக ஏற்றுக் கொண்ட **<u>நம்பிக்கைக்குரியவர்களிலும் பக்குவப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்குவது</u>** என்று முடிவெடுத்து சில ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால், நம்மவர்கள் மீண்டும் மீண்டும் பழைய அச்ச, கூச்ச, மாச்சரியங்களைப் பற்றியே பேசி வருகின்றார்கள்.

உலகியலுக்கேற்ப மக்களோடு மக்களாக கலந்து பழகி தொன்மையான, மேன்மையான, நன்மையான சித்தர் நெறிக் கருத்துக்களைப் பரப்பி தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டையை வலிமைப்படுத்தி தமிழர்களிடையில் பற்றையும், பாசத்தையும் வளவளர்ச்சி பெறச் செய்து உடனடியாகத் தேவைப்படுகின்ற சமய விழிச்சியையும், சமுதாய எழுச்சியையும், அரசியல் செழிச்சியையும் உருவாக்கிடப் புறப்பட்டிருப்பவரே நமது குருதேவர் என்ற எண்ணம் முதலில் நம்மவர்களுக்கிடையில் உருவாகிட வேண்டும்.

நமது குருதேவரை மாய விளையாடல்காரராகவோ, சித்து விளையாடல்காரராகவோ, குறிகாரராகவோ, ... மக்களுக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. நமது குருதேவரை வரலாற்று மேதையாக, இலக்கிய மேதையாக, அரசியல் மேதையாக, தத்துவ வித்தகராக, தமிழினத் தலைவராக, அருளாட்சி நாயகமாக, **மெய்யான இந்துமத**ப் பீடாதிபதியாக, தமிழினத் தாழ்ச்சிகளுக்கும் வீழ்ச்சிகளுக்கும் சமாதி கட்டும் புரட்சியாளராகப், பகுத்தறிவு ஊற்றாக, சமுதாயச் சிந்தனை ஊற்றாக, புதிய சமுதாயம் அமைக்கத் தேவையான கருத்துக்கள் நிறைந்து கிடக்கும் கருத்துக் கருவூலமாக, மிக எளிய உணவேற்று (வெங்காயமும், மோரில்லாத பழைய சோறும்) எங்கும் பயணப்படத் தயாராக இருக்கும் ஏழைப் பங்காளராக ... சித்தரித்துக் காட்டும் உண்மையை நன்கு விளக்கிக் காட்டும் வல்லவர்களாக நம்மவர்கள் இருக்க வேண்டும்.

எனவே, இனிமேல் எந்தவிதமான அறிவிப்புக்களும் அறிவிக்கைகளும் இல்லாமல் எந்த இடத்திற்கும் தந்தி மூலமான குறுகிய கால செய்தியறிவிப்புடன் குருதேவர் நேரடியாக வருவார். இப்படி வரும்போது அ.வி.தி. பணியை விட அதிக அளவு இ.ம.இ.க்காக நமது ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், வேற்று மதத்தவர்கள், மாற்றுக் கட்சியினர்கள் முதலியவர்களை நேருக்கு நேர் காணல் மூலம் விடை வழங்குவார். கூடுமானவரை அருகிலுள்ள கோயில்களுக்குச் சென்று பொதுமக்களோடு கலந்து வழிபாடுகள் செய்வார். தனிமனிதர்களின் குடும்ப விழாக்களில் பங்கு பெறுவார்.

**(கருப்புச் சட்டை, கால்சட்டை அல்லது வேட்டி அணிந்து இ.ம.இ. தலைவராகக் கலந்து கொள்வார். மிகமிக அவசியமானால்தான் சன்னிதான உடையில் வருவார். காட்சிப் பொருளாக உலா வராமல் கருஞ்சட்டை வீரராக, செஞ்சட்டை வீரராக உலகியலுக்கேற்ப சமுதாயத் தலைவராக உலாவருவார்.)** ஓர் ஊரின் இரண்டு மூன்று எல்லைகளிலாவது இலக்கியப் பேச்சு, கலைத்துறை விரிவுரை, அரசியல் விமர்சனம், வரலாற்றுப் பேச்சு,... முதலிய பலதுறைக் கண்ணோட்டக் கருத்துக்களையே வழங்குவார்.

ஒலிபெருக்கி தேவையில்லை. யாருடைய வீட்டு மொட்டை மாடியாவது கிடைத்தால் கூடப் போதும்; அல்லது கோயில் மண்டபம், பள்ளிக் கூடத்து விளையாட்டு அரங்கம், ஆற்றங்கரை அல்லது ஏரிக்கரை போதும். கூட்டமும் 10 அல்லது 15 பேர்கள் இருந்தால் கூடப் போதும். இக் கூட்டம் கூட குருதேவர் வந்த பிறகு, அந்தந்த வட்டாரத்தார் தங்களுக்குத் தெரிந்த பொது அங்காடிகளிலும், கல்விக் கூடங்களிலும் பணிபுரியும் நபர்களிடம் தெரிவித்தால் போதும். பெரிய பொதுக்கூட்ட ஏற்பாடுகளோ, விளம்பரங்களோ, ஊர்வல முயற்சிகளோ, விழாக்கோலமோ, விருந்தோ தேவையில்லை! தேவையில்லை!!

தேவையில்லை!!! இவற்றை உண்மையிலேயே நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களிடையே குருதேவர் வந்தால் செலவாகும் என்ற தவறான கருத்தை சிலர் பரப்பி வருகின்றனர். உதாரணமாகத் தாங்கள் இப்போது மண்டலப் பூசைக்காக அறிவிக்கை அச்சடித்த செலவிலேயே குருதேவர் அங்கு வந்து திரும்பியிருக்க முடியும். உலகியலுக்கேற்ப குருதேவர் தம்மை மருந்துகளோடு நோயாளியாகத்தான் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றாரே தவிர, விருந்துகளோடு வாழவில்லை.

5) உடலியலாகவும், உள்ளபடியாகவும் குருதேவர் வருகை வீண் செலவுகளை அனுமதிப்பதாக இல்லை. எனவே, நம்மவர்கள் இனிமேலாவது நிலைமையை உணர்ந்து குருதேவரின் வருகையை ஒரு பொருட்டாகக் கருதித் தடைகள் எழுப்ப வேண்டாம் என வேண்டுகின்றோம். குருதேவர் விருந்துகளிலோ, விழாக்களிலோ கலந்து கொள்ளக் கூடிய நிலையில் இல்லை! இல்லை!! இல்லை!!! எனவே, குருதேவரின் வருகையால் பெரும் பொருட்செலவு ஏற்படுகின்றது என்பது தவறான கருத்தாகும்.

அது மட்டுமல்ல; குருதேவரின் வருகையின்போது பல வட்டாரத்தினரும் ஒரே இடத்தில் கூடுவதால்தான் வரவேற்கின்றவருக்கு பெரும் செலவு ஏற்படுகின்றது. குருதேவரை அவரவர் வட்டாரத்திற்கு வரவழைத்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும், அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்சிக் கண்ணோட்டம் (A Party outlook, approach) இருக்க வேண்டும். இல்லையென்றால், நாம் பூசாறிக் கூட்டமாகத்தான், பசனைக் கூட்டமாகத்தான் மாறிடுவோம்.

குருதேவரைக் கண்டும், அவருடைய கைகள் மூலம் அருளூறு பூசனைப் பொருள்கள் பெற்றும் மகிழ்வதோடு; குருதேவரின் கருத்துக்களைக்

கேட்க வேண்டும், கொள்கையைப் பரப்ப வேண்டும் என்ற கருத்தோட்டமும், விருப்பமும் நம்மவர்களிடையில் பெருக வேண்டும்.

குருதேவர் கலை, இலக்கியம், வரலாறு, தத்துவம், சமூகவியல், மானிட இயல், உலக விஞ்ஞானம், ... முதலியவற்றைப் பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்த வைத்துக் கேட்கவும்; பிறரைக் கேட்பிக்க வைக்கவும் வேண்டும். அதாவது, மதத்தின் மீது நம்பிக்கையோ, விருப்பமோ இல்லாமல் நாத்திகர்களாகவும், பகுத்தறிவு வாதிகளாகவும், சீர்திருத்த வாதிகளாகவும், கலை வாதிகளாகவும், இலக்கிய வாதிகளாகவும், அறிவியல் வாதிகளாகவும், அரசியல் வாதிகளாகவும் வாழ்கின்றவர்களும் நமது குருதேவரை வரவேற்று அவருடன் கருத்துப் பரிமாற்ற உரையாடல் செய்தோ, சொற்பொழிவு நிகழ்த்திக் கேட்கவோ கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அப்பொழுதுதான் கானல் நீராகவும், குதிரைக் கொம்பாகவும் இருக்கின்ற தமிழ்மொழிப் பற்று, தமிழினப் பற்று, தமிழ்நாட்டுப் பாசம், ..... தமிழ்ப் பண்பாட்டுப் பிடிப்பு முதலியவைகளை நாடு தழுவி பரவலாக உருவாக்கக் கூடிய வசதியும், வாய்ப்பும் நமது குருதேவருக்குக் கிடைக்கும். ஏனென்றால், நாம் மொழி விடுதலை, இன விடுதலை, பண்பாட்டு விடுதலை முதலியவைகளுக்காகத் தமிழர்களை ஒற்றுமைப் படுத்திடும் மாபெரும் முயற்சியில் இறங்கியிருக்கிறோம். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக!

6) பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்குப் பிறகு, சுமார் 600 ஆண்டுக்கால இடைவெளிக்குள் செயல்படத் துவங்கிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கே சமயத்துறை, சமுதாயத்துறை, அரசியல்துறை என்ற மும்முனைப் போர்க்களத்தில் போரிட நேரிட்டது. அவர் அரசியலை முதல் விசயாலயனிடமும், அவனின் வாரிசுகளிடமும்

ஒப்படைத்தார். சமுதாயத்தை கம்பர், பெருந்தேவனுர், பெரும்பள்ளி சிறுபள்ளி ஆசிரியர்கள், தஞ்சைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் முதலியோரிடம் ஒப்படைத்தார். சமயம் ஒன்றை மட்டும் தம் கையில் வைத்திருந்தார். அதுவும், தான் உருவாக்கிய அருளாட்சி முதலாம் இராசராசன் காலத்தில் நல்ல வளர்ச்சியைப் பெற்ற பிறகே தஞ்சைப் பெரிய கோயிலாகவும், பல கருவறை உயர் கோபுரக் கோயில்களாகவும் வடிவப்பட ஆரம்பித்து பாதியிலேயே நின்றன.

அதாவது, இவர் உருவாக்கிய சமுதாய வாரிசுகளும், அரசியல் வாரிசுகளும் சித்தர் நெறி என்னும் இந்துமதத்தின் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் மாறி விட்டனர். எனவே, அவர் போராடிய மும்முனைப் போர்க்களம் மாபெரும் தோல்வியாக முடிந்தது. அந்தத் தோல்வியின் அதிர்ச்சிகளும், அயர்ச்சிகளுமே இன்றைக்கு அனைத்து வகையான பயிற்சிகளையும், முயற்சிகளையும் முடித்து அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, ஞாலகுருவாக, இந்துமதத் தந்தையாக இருக்கின்ற ஞானகுருவுக்கே விரும்புகின்ற அளவு அருளுலகத்தினுடைய ஆதரவும், உதவியும் கிடைக்க முடியாமல் செய்து விட்டன. எனவேதான், மும்முனைப் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கின்றுர் நமது குருதேவர்.

குருதேவரை மட்டும் காப்பாற்ற வேண்டிய உரிமை, பெருமை பிறச்சினைகளால்தான் பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி நமது குருதேவருக்காக விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறுர். எனவேதான், நமது குருதேவர் கருஞ்சட்டையும், செஞ்சட்டையும் அணிந்து பெரியாரின் சமுதாயத் தத்துவத்தையும், கார்ல் மார்க்சின் அரசியல் சித்தாந்தத்தையும், தமிழிலக்கியங்கள் தருகின்ற சமய சமுதாய அரசியல் கொள்கைகளையும் விளக்கியுரைத்து இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராகவே செயல்பட பெரிதும் விரும்புகின்றுர்.

இல்லையென்றால், இம்மண்ணுலகம் தோன்றிய நாள்முதல் அருளுலகில் சாதிக்கப்பட முடியாத சாதனைகளை யெல்லாம் சாதித்து விட்ட நிம்மதியையும், நிறைவையும் கண்டு ஞான, மோன, மவுன தவத்தில் ஈடுபட்டு விடலாம். அவருடைய செயல் முடிவு அவரைச் சுற்றி நிற்கின்ற இளைஞர்களின் கையிலேயே இருக்கின்றது.

அவரைப் பொறுத்தவரையில் பதினெண்சித்தர்கள் உருவாக்கிக் காட்டிய சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் அமைக்கக் கூடிய முயற்சிகளுக்கான கருத்தையும், செய்திகளையும் வழங்குவதுதானே ஒழிய, அவற்றைச் செயலாக்கும் முயற்சியே அவருடைய வாழ்க்கை அல்ல! அதாவது, பதினெண்சித்தர்கள் வழங்கிச் சென்றுள்ள செல்வங்களை மக்களுக்கு வாரி வழங்குவதே அவரது பணி. அப்பணியில் அணி செய்வதே நமது பணி!

எனவே, தமிழினத்தின் பெருமையும், உரிமையும் நிலையான வாழ்வு பெறுவதற்கு என்னென்ன திட்டங்களும், ஏதுக்களும் இருக்கின்றன என்பனவற்றைப் பரப்பும் முயற்சியிலேயே நம்மவர்கள் ஈடுபட வேண்டும். இதுவே, மண்டலப் பூசையின் அறிவுக் கொடையாகவும், அருட் கொடையாகவும் கருதப்பட வேண்டியது.

7) இனிவரும் நிகழ்ச்சிகளிலாவது குருதேவரை எப்படியெப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விவரித்துத் திட்டமிட்டுச் செயல்படுங்கள். உங்களுக்குத் தேவையான பரிந்துரைகளையும், கருத்துரைகளையும் சென்னையிலிருந்து பொறுப்பாளரும், ஆட்சிமன்றக் குழுவினரும் வழங்குவார்கள். நாம் ஒரு மதவாதிகளின் கூட்டமல்ல; நாம் வரலாறு, இலக்கியம், தத்துவம், கலை, சித்தாந்தம், ... அனைத்தும் தெரிந்த மொழி விடுதலை வாதிகள், இன விடுதலை வாதிகள்,

சமத்துவ வாதிகள், சகோதரத் தத்துவ வாதிகள், பொதுவுடமை வாதிகள்.

நாம் நமது கொள்கைகளேயும், குறிக்கோள்களேயும் குடும்ப விழாக்களிலும், கோயில் விழாக்களிலும், பொதுமேடைகளிலும் விளக்கி முழக்கித்தான் பெருவாரியான பொதுமக்களின் ஆதரவையும், உதவியையும் பெற்றுக வேண்டும். நாம் சமய வழியில் சமுதாயப் புரட்சி செய்தே தீருவோம். அது ஒரு முழுமைப் புரட்சியாக (A Total Revolution), ஒரு பண்பாட்டுப் புரட்சியாக (A Cultural Revolution), ஒரு பகுத்தறிவுப் புரட்சியாக (A Rationalistic Revolution) இருக்கும்.

ஆனுல், இப்புரட்சி அமைதிவழியில், அன்புவழியில், அறவழியில், அருள்வழியில் ஆக்கப்பூர்வமானதாகவே அமைந்திடும். கண்மூடித்தனமான சர்வாதிகாரங்களேயும், எதேச்சதிகாரங்களேயும், சுரண்டல்களேயும், ஏமாற்றுக்களேயும், ... இப் புவிப்பரப்பை விட்டு முழுமையாக ஒழித்திடக் கூடிய புரட்சியாகவே இருக்கும்.

எனவே, நமது குருதேவரை ஒரு சமூகத் தலேவராக, சீர்திருத்தச் சிந்தனேயாளராக, இலக்கியப் புரட்சி விமர்சகராக, மதமறுமலர்ச்சி செயல்வீரராக பொதுமேடையில் கருஞ்சட்டையிலும், செஞ்சட்டையிலும் அறிமுகப்படுத்த முயலுங்கள். **இருப்பினும், அவர் இந்துமதத் தந்தையாக, பீடாதிபதியாக, சன்னிதானமாகச் செயல்படுவார் தேவைக்கேற்ப.**

இவற்றைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுகின்றவர்களே நமக்குத் தேவை. நம்பிக்கையும், நல்லெண்ணமும், தலேமையை மதிக்கும் பண்பும் உடையவர்களே நமக்குத் தேவை! இல்லாவிட்டால் காவிரியாற்றங்கரைக் கருவூரர் காலம் முதல் திருவிசைப்பா பாடியவர்கள் காலம்வரை கொடுக்கப்பட்ட பயிற்சிகளும், முயற்சிகளும் பாலேவனத்து

மழையாக, கடலில் காய்ந்த நிலவாக பயனற்றுப் போனது போலவே 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் பயிற்சிகளும், முயற்சிகளும் பயனற்றுப் போகும்.

**இங்ஙனம்,**

**பொறுப்பாளர், மற்றும் நிறுவன நிர்வாகக் குழு அமைப்புக் குழுவினர்.**

Note: இம்மடலை அச்சிட்டோ, Cyclostyle செய்தோ அனைவருக்கும் வழங்குக!

நகலெடுத்தவர்:

அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தர் வாரிசு, சித்தரடியான் ம.செ.விசயராகவன், B.Sc., DTVT. (S/O, C.M.செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயில் சமீபம், வேம்படிதாளம் அஞ்சல், சேலம் மாவட்டம் 637504)

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சென்னை-11,

1-8-85.

# <u>செயல்நலம் பாராட்டுத் திருவோலை</u>

அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு.இராமானுசதாசு (12, காந்திபுரம் 5ஆம் வீதி, காரைக்குடி - 623001) அவர்களின் 29/7/85ஆம் நாளின் அஞ்சலுக்குப் பதில்.

1) அனைத்தும் ஆத்தாக்கள் தாத்தாக்கள் செயலே!

2) தாங்கள் மிகுந்த பொறுப்போடும், பொறுமையோடும் பயிற்சிகள் செய்து வருகின்றமைக்கு மிக்க மகிழ்ச்சி! பாராட்டு! அமராவதியாற்றங்கரையில் அனாதி காலம் முதல் பல கருவூரார்கள் இருந்து வருகிறார்கள். அவர்களில் ஒருவரே தங்களின் துணைவியாரின் மூலம் செயல் படுகிறார். இது முற்பிறவியின் தொடர்பாகும். அவர்கள் கரூரிலும், சிறுமுகையிலும் குருதேவரிடம் பெற்ற அருளை நெடுந்தொலைவு கொண்டு செல்ல வலிமையான மனமும், தெளிவான சிந்தையும் பெற முடியாமல் போனதாலேயே பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தமது திருக்கூட்டத்தார்களில் ஒருவரை அனுப்பி அவர் மூலம் செயல்படுகிறார். <u>பீடாதிபதிகள் அனைவரும் சமமே. எந்த அளவு இன்றுள்ள பீடாதிபதிகள் ஏற்கிறார்களோ; தனிமனிதர்கள் அந்த அளவே மற்ற பீடாதிபதிகளின் அருளையும், ஒப்புதலையும், பாதுகாப்புகளையும் பெறுவர்</u>.

3) தங்களுக்கு அமராவதியாற்றங்கரைக் கருவூராரில் ஒரு கருவூரார் மூலம் வழங்கப் பட்ட அருட்பயிற்சி மிகச் சிறந்தவையே. தங்களின்

அநுபவங்களும் உண்மையானவையே. இதைப் பற்றி மிகப் பெரிய விளக்கங்களை விரும்பினால் M.C.இராமனையோ, செகதீசனையோ, சுடாலின் மனைவி சரோசினி தேவியையோ வரவழைத்துக் கேட்டுக் கொள்ளுங்கள். தங்களின் அனுபவங்கள் தங்களின் பழம் பிறப்புத் தொடர்பானவையே. எனவே, மனவலிமை இருந்தால் மட்டும் மேலும் அதைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் விட்டு விடுங்கள்.

4) சித்தரடியான் பூபதியை எட்டு வாரங்களுக்கு வியாழக்கிழமை பூசைக்கு ரூபாய் 50க்கு குறையாமல் அனுப்பச் சொல்லிச் சொல்லுங்கள். அனைத்துப் பரிகாரங்களும் இங்கேயே செய்யப்படும். அவருடைய அனுபவங்களையும் வாராவாரம் எழுதி அனுப்பச் சொல்லுங்கள். விரைவில் அவரது வீட்டுப் பூசை அறையிலும், தொழிற்சாலையிலும் திரிசூலங்களை அருட்கோட்டத்தில் மந்திரித்துப் பூசைக்குரியதாக வைக்கச் சொல்லுங்கள்.

5) J.P.பட்டேலுக்காக பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. பூசை முடிந்த பிறகுதான் தகடுகள் அனுப்ப முடியும். அவசரம் வேண்டாம். ரூபாய் 100 கிடைத்தது. அவரை வேட்டி, கச்சை, தலைப்பாகை முறையே 4 முழம், 8 முழம், 12 முழம் குருதி வண்ண சிவப்பில் உடுத்தி வியாழனும், ஞாயிறுமாவது கட்டாயமாக சுடலைக்கு சென்று வரச் சொல்லுங்கள். இந்த உடையில் காரையில் உள்ள அனைத்துக் கோயில்களுக்கும் வசதிபட்ட நேரத்தில் சென்று வரச் சொல்லுங்கள்.

6) இப்பொழுது நம்மிடையே தத்துவப் போர் (The War of Explaining and Establishing our Philosophy, Policy and Principles) நடந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் கருத்து மாறுபாடுகளும், முரண்பாடுகளும் சரி செய்யப்படும் முயற்சி (The Settlement of the Ideological Conflicts and Contradictions) நிகழுகின்றது. எனவேதான், முத்தையா செட்டியாரின் அருட்கணிப்பு அனுப்பப்படவில்லை. பூசைச் செலவு அதிகமாவதால் அருட்கணிப்பு ரூ.48 உடன் குருதேவர்

சந்தா ரூ.15 + ஆண்டுமலர் ரூ.5 + அ.வி.தி. உறுப்பினர் ரூ.5 = 48+25 = 73 வாங்கி அனுப்பவும். நாமும் குறிகாரர்கள் போல அருட்கணிப்புக் கூறி காலத்தை வீணுக்க வேண்டாம்.

7) திருமதி அரசி அவர்களுக்காக பூசைகள் செய்யப் படுகின்றன. வாரம் ஒருமுறையாவது அரசியாரை சுடுகாட்டுப் பூசைக்கும் அழைத்துச் சென்று அங்கேயே கட்டு மந்திரம் கூறி மந்திரிப்பது அவசியம். அவர் எப்பொழுது அருட்கோட்டத்திற்கு வந்தாலும் புதிய மஞ்சள் நீர் மந்திரித்து கொடுத்தனுப்புங்கள். எட்டுத் திசைக் கட்டுத் தகடுகள் இத்துடன் அனுப்புகிறோம். காணுமல் போக காணுமல் போகப் பயன்படுத்திக் கொள்ளவும். மண் கலயத்தில் போட்டுப் பாதுகாக்கவும் சொல்லுங்கள்.

அன்பு

ஓலைநாயகம் பெ.சௌந்தரராசன்.

01/08/1985 11:00A.M.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியான் திரு சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சென்னை-11,
14/09/1985.

# அன்பு விளக்கச் செயல் ஊக்கத் திருவோலை

ஞானத்தந்தை, ஞானுச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் தமது வாரிசு, மகன், பதிலி, அருட்சேனைத் தளபதி, சித்தரடியார் சண்முகானந்தன் B.E.க்கு எழுதும் அன்பு விளக்கச் செயல் ஊக்கத் திருவோலை.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அனைத்தும் அம்மையப்பன் அருளால் நலமாகும். நாம் அருளாட்சிக்குரிய அருளாளர்களே! புரிந்தும் புரியவைத்தும் தன்னம்பிக்கையோடு செயல்பட்டுச் **செங்குருதிப் புனலில் நீராடுவோம்; நெருப்பு மழையில் அருட்பயிர் செய்வோம்.**

2) நான் எப்படி வாழ்ந்தேன்? வாழுகிறேன்? என்பதை அனைவரும் அறிய, புரிய, உணர, நம்ப ஏட்டுச் சான்றுகளும், ஊன்றுகளும்; நிகழ்காலம் நெருங்கிய பழக்கமுடையவர்களும் உள்ளனர். ஒரு மாபெரும் உலக முதல் இனத்தைச் சூழ்ச்சியால் வீழ்த்தித் தொடர்ந்து துரோகிகளாலும், அப்பாவிகளாலும், கூலிகளாலும் அடக்கி யொடுக்கித் தாழ்த்தியே வாழ்ந்து வரும் ஒற்றுமையும், கட்டுப்பாடும், அறிவுக்கூர்மையும் உடைய ஓர் இனத்தை எதிர்த்து நேரடிப் போர் புரியத் தயாராகி வரும் **அருளாட்சி நாயகமே யாம்**. எம் மீது நம்பிக்கையும், தன்னம்பிக்கையும், தன்மான

இனமான உணர்வும், மொழிப்பற்றும், இனப்பற்றும், பண்பாட்டு விடுதலை நாட்டமும், ... உடைய **‘பெருவீரர்களே எம்மைத் தொடர முடியும்’ நெருப்பாற்றில் நீந்துவது போன்றதே இது**?!?!

3) மகனே! நீ இன்றைய பூசையறையில் மனம் கலங்கி கைகூப்பி, மண்டியிட்டு, என்னைப் பிரிய முடியாமல் அரற்றிய நினைவு பசுமையாக இருக்கிறது. “இலைமேல் முள் பட்டாலும் சரி; முள்மேல் இலை பட்டாலும் சரி ... கிழியப் போவது இலையே” - அதுபோல, **உன் குடும்பத்தார் உனக்கும் எமக்கும் தொல்லை தரத்தான் செய்வார்கள்**. நீ, பொறுமையும், வலிமையும், வசதியும் மிகுந்த நிலையில் தமிழகம் வந்தால்தான் சமாளிக்க முடியும். எச்சரிக்கை. உன்னைக் காணத்தான் விரும்புகிறோம். சென்னை வந்து சில நாட்கள் தங்கிச் செல்லலாம். வசதிப்படி செய்திடு. உன் அமைதியே எமது அமைதி.

4) நாம், பண்பாட்டுப் புரட்சியை இந்தியா முழுதும் கருத்துப் புரட்சியாகச் செய்தேயாக வேண்டும். ஆதிசங்கராச்சாரியார் போல் தவக்கோலம் பூண்டு இந்தியா முழுதும் சுற்றி வர சிலர் தேவை. அந்தத் தோற்றத்தை நீயும், சுந்தரராமனும் ஏற்று அவரவர் வட்டாரத்தில் இ.ம.இ. பணி செய்து வடநாடு முழுவதும் **மெய்யான இந்துமத**த்தை விளக்கியும், *பொய்யான ஹிந்துமதத்*தை விரட்டி ஓட்டியும் செயல்பட வேண்டும். பொருள் வசதி தேவை. ஒரு சில ஆதரவாளர்கள் தேவை. ஒளியுடல் தேவை. பூசைகளை அதிகமாக்க வேண்டும்; குத்து விளக்கேற்றிச் சிவபுராணம், சீவகாயந்திரி, காயந்திரி, போற்றி அகவல் ... கூறுக. அவசரப்பட்டு வேலையை விட்டுவிட வேண்டாம். தைலம், பல்பொடி, வளம், சித்தர் டீ,

காபி, ... முதலியவை தயாரிக்க (Siddha Chemical Industries) **சித்தர் மருந்து** ஒரு நிறுவனமாக வளர்ந்தால்தான் நல்லது.

5) சுந்தரராமன் குடும்பத்தார் தொல்லைகளைச் சமாளிக்க முடிந்தால்தான் தமிழகம் வரலாம்! நன்றி.

**அன்புத் தந்தை**
**(ஒப்பம்) ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
14/9/85.

நகல் நல்குபவர்:

அருள்மிகு வேம்படிதாளம் காமகோடி பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி 2/24, புதிய வீதி, வேம்படிதாளம் - 637504; நகல் எழுதப்பட்ட நாள்: 21/04/86.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# கபாடபுரத்துக் கருவூரரின் பரிகாரப் பூசை விளக்க மடல் இடம்பெறும் அஞ்சல்

30.12.84முதல் அருளாட்சித் தாக்கீதாக அனைவருக்கும் அனுப்பப் படுகிறது.

ஊழ்வினையின் பாதிப்பால், விதியின் வலிமையால் வருந்துபவர்க்கும், வேலியில்லாத பயிர்போல வாழ்வில் எவ்வளவுதான் அருட்பயிர் விளைவித்தாலும் அவை மந்திரவாதி என்கின்ற ஆடுமாடுகளாலும், பிறப்பியல் பாதிப்பு என்கின்ற திருடர்களாலும் பாதிக்கப் பட்டவர்களுக்காக, ஞாலகுரு சித்தர் கருவூரர் குருதேவர் மூலம் விடுக்கும் <u>தாத்தா கபாடபுரத்துக் கருவூரரின் பரிகார பூசை விளக்க மடல்</u>.

1) மேற்கூறிய பாதிப்புகளால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்நாள் முழுதும் நேரிலோ, பதிலிகளின் மூலமோ, ஞாயிறு பூசையில் குருகுலத்தில் கலந்து கொள்ள வேண்டும்; அல்லது அந்தந்த வட்டார அ.வி.தி. மையத்தில் நடக்கும் யாகத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

2) இவர்கள் கட்டாயமாக பருவ பூசை அமாவாசை பூசைகளில் கலந்து கொள்ள வேண்டும். வைகாசிப் பால்குட விழாவில் அவரவர்களுக்கு கூறும் அருள்வாக்கின்படி, அவரும் அவரது வீட்டாரும் அக்கினி சட்டி, பால்குடம், மஞ்சள்குடம், சந்தனக்குடம்,

பன்னீர்க்குடம் என்று வகைக்கொன்ருக எடுக்க வேண்டும். அதாவது வீட்டில் உள்ள அனைவரும் ஏதாவது ஒரு குடம் எடுத்தாக வேண்டும். இதற்குரிய கட்டணத்தை ஒவ்வொரு வருடமும் பால்குட விழா முடிந்தது முதல் குடும்பமாக செலுத்தி வரிசை எண் பெற்று தலைமைச் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். அதாவது, அவர்களுக்காக ஆண்டு முழுதும் குருதேவரின் பூசையறையில் பூசை செய்யப் பட்டேயாக வேண்டும். வேறு வழியில்லை. இவர்களுடைய பிறப்பியல், மண், இரேகை முதலியவைகள் பூசையில் வைக்கப்பட்டேயாக வேண்டும்.

1985 ஆண்டுக்குரிய குருதேவர் சந்தா ரூ.15/- + குருதேவர் ஆண்டுமலர் ரூ.5/- + மாதாமாதம் குருதேவர் பத்திரிகை மந்திரித்து அனுப்ப ரூ.6/- ஆக ரூ.26/-ஐ நேரடியாகத் தலைமைச் செயலகத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். இவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை வாராவாரம் தடுக்க வேண்டுமாளுல் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருளாட்சிக்குரிய வியாழக்கிழமையில் அ.வி.தி. யாகசாலை ஒன்றை அவரவர் வீட்டின் முன் அமைக்க வேண்டும். எந்தவிதமான உலகியல் தீட்டும் தடையும் சொல்லாது தவருது வியாழன் பகல் அல்லது இரவு வீட்டில் யாகம் நடந்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருட்கொடைப் பணி நடைபெற்ருக வேண்டும். இப் புண்ணியத்தால்தான் இவர்களுக்கு அருளுலகச் செல்வாக்கும், ஆதரவும் கிடைத்திடும். இவர்கள் ஊரில் இல்லாவிட்டாலும் வியாழக் கிழமையில் வீட்டு யாகசாலையில் பூசை நடக்க வேண்டும். மெய்ஞ்ஞானக்கொடிக்கு பகல் 11-1½இல் இறைச்சியுணவு படைக்கப்பட்டு வழிபாடு செய்தாக வேண்டும்.

# அடங்காத பேய்க்கும் தீராத நோய்க்கும் கபாடபுரத்துக் கருவூரார் வழங்கியுள்ள அருளுலகப் பாதுகாப்புத் திட்டம்

1) பாதிக்கப்பட்டவரின் உயரத்தை விட (குடும்பத் தலைவர்) ஒரு சாண் உயரம் அகலம் உள்ள மூன்று திரிசூலங்கள் தயாரித்து முதலில் குருகுலத்தில் யாகத்தில் அருளேற்றிக் கொடுக்கப்பட வேண்டும். அதாவது, யாக முடிவில் யாகச் சாம்பல் பூசி சந்தனம், குங்குமப் பொட்டிட்டு கதம்பப் பூ ஒரு முழமாவது ஒவ்வொன்றிற்கும் சுற்றி தேங்காய் நீர் அல்லது இளநீர் அவற்றின் மீது தெளித்து அருளேற்றித் தர வேண்டும்.

2) இந்த மூன்று திரிசூலங்களையும் அவரவர் வீட்டில் யாராவது ஒரு சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியாராவது சென்று வசதி வாய்ப்புக்களுக்கேற்ப யாகம் செய்து படையல் பூசை போட்டு அருளுலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

3) முடிந்தால் யாகம் செய்து அன்றைக்கோ, வசதிப்படி என்றாவது ஒருநாள் (48 நாட்களுக்குள்) அவர்களுடைய குலதெய்வம் கோவிலுக்குச் சென்று மூன்று திரிசூலங்களுக்கும் மஞ்சள் நீராட்டி முறைப்படி அக் கோயில் பூசாரியால் திருநீறு, குங்குமம், சந்தனம், கதம்பப்பூ சூட்டப்பட்டு அருளேற்றித் தரப்பட வீட்டில் கொண்டுவந்து அன்றாடம் காலை, மதியம், மாலை, முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு முதலிய ஆறு வேளைகளில் ஏதாவது ஒரு வேளையில் சிவபுராணம் பாடி பிறகு காயந்திரி மந்தரம் 108 முறை கூறி இன்றைய இந்துமதத் தந்தையின் அருட்பட்டங்களைக் கூறி அருளுலகப் பாதுகாப்புக்களை வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்பூசையை யார் வேண்டுமானுலும் செய்யலாம். பூசைக்கு அகல் விளக்கோ, குத்து விளக்கோ ஏற்றி ஒரு ஊதுபத்தி ஏற்றி வைத்தால் போதும். வீட்டில் சமைத்த எந்த உணவையாவது சிறிது படையல் இடுதல் போதும். அதை காக்கை, நாய் போன்றவைகளுக்கு வைக்கலாம்.

**குறிப்பு**:- குறைந்தது இரண்டு மண்டலமாவது (96 நாட்கள்) இப்படி பூசை செய்தபின் மூன்று திரிசூலங்களேயும் குருகுலத்திற்குக் கொண்டு வந்து ஞானக்காட்சி மூலம் அருட்சித்தி நிலே பெற்றுவிட்டதா என சோதித்துக் கொள்ள வேண்டும். பிறகு மூன்றையும் அருள்மலே மேல் வைத்து அறிவிப்புகளே செய்ய வேண்டும். பிறகு ஒன்றை குருகுலத்திலும், ஒன்றை அவர்களுடைய குலதெய்வம் இருக்குமிடத்திலும் அல்லது அவர்களுடைய ஊர் சுடுகாட்டிலும் நட வேண்டும். மற்ருேர் திரிசூலத்தை வாரப் பூசைக்கு வரும்போதும், பருவப் பூசைக்கு வரும்போதும் குருகுலம் வரும்போது அருளேற்றிச் செல்ல வேண்டும்.

**குறிப்பு**:- அ.வி.தி. தலேமைச் செயலாளர், திருமந்திர ஓலேநாயகம், பரமாச்சாரியார் அவர்கள் இப்பரிகார பூசைமுறையை அனேத்து இடங்களுக்கும் அருளாட்சித் தாக்கீதாக அனுப்புமாறு குருவாணே இடப்படுகிருர். குருகுலத்திலும் இனி செயல்படுத்துக!

குருவாணே!

30/12/84.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு முத்துராசமூர்த்தி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# அருளுலக இருளகற்றும் திருவிழா

8-11-84 முதல் 10-11-84 வரை காரைக்குடியில் 36வது அருட்பணி விரிவாக்கத் திட்ட அருள்வழங்கு யாகசாலையும் பதினெண்சித்தர் சிவசத்தி பீடமும் துவக்கப்பட்டு அருளை அநுபவப் பொருளாக வழங்குதலும்; 48 வகையான அருட்பட்டத்தினரை உருவாக்குதலும்; 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும் புத்துயிர்ப்புச் செய்தலும் ஆரம்பமாகின்றன.

இந்த அருளுலக இருளகற்றும் திருவிழாவில் அரியவாள்கள், கூரியவாள்கள், பெரியவாள்கள், சீரியவாள்கள், நேரியவாள்கள்,... முதலியோரும்; ஏமகோடிப் பீடாதிபதிகள், காமகோடிப் பீடாதிபதிகள், சோமகோடிப் பீடாதிபதிகள், வாமகோடிப் பீடாதிபதிகள், ... முதலியோரும்; பரமாச்சாரியார்கள், பிறமாச்சாரியார்கள், மாயோனுச்சாரியார்கள், இறைமையாச்சாரியார்கள், கடவுளாச்சாரியார்கள், தெய்வீகாச்சாரியார்கள், தேவாச்சாரியார்கள், ... முதலியோரும்; சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், அமளிகைகள், இருக்கைகள், திருவடிகள், ... முதலியோரும் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத் திருவிழாவில் உலகச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய, ... தத்துவங்களுக்குப் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும், தோற்றுவாயிலாகவும், கருவறையாகவும், கருவூலமாகவும் இருக்கும் தெய்வீகத் தென் தமிழ் நாட்டின் அருளாட்சிப் பணி நாயகர், ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, குருதேவர், தமிழினத் தலைவர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார், பன்னிரண்டாவது

பதினெண்சித்தர் பீடாதிபதி, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் கலந்து கொள்கிறார்.

தமிழின ஒற்றுமையும், சமுதாய விழிச்சியும், மொழிச் செழிச்சியும், சமய விழிச்சியும் வளவளர்ச்சி பெற்றிடத் தாயகத்து மக்கள் நாட்டுப் பற்றுணர்வோடு கூடித் தங்களின் தலைவரின் அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை, அருள்வழங்கல், ... முதலியவைகளைத் துய்த்துப் பயன்பெறுமாறு அழைக்கப் படுகிறார்கள்! அழைக்கப் படுகிறார்கள்!! அழைக்கப் படுகிறார்கள்!!!

தாயகத்தில் தன்மான உணர்வும், தன்னம்பிக்கை உணர்வும், மொழிப் பற்றுணர்வும், இன ஒற்றுமையுணர்வும், நாட்டுரிமையுணர்வும் தழைக்க, செழிக்க இனியாவது முயல்வோம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

ஏந்துகளை நல்குக! நல்குக! நல்குக!

ஆதரவுகளை வழங்குக! வழங்குக!! வழங்குக!!!

விழிச்சி பெறுவோம்! எழுச்சி பெறுவோம்! செழுச்சி பெறுவோம்!

மதமே மனிதகுல வரலாறு!

மந்திரமும் மருந்தும் மனிதனின் கண்கள்!

கோயில் அண்டபேரண்ட விளக்கம் தரும் கலைக்களஞ்சியம்!

குருவாசகமும், திருவாசகமும் தமிழினக் கண்கள்!

கருவாசகமும், தருவாசகமும் தமிழினக் கைகள்!

ஆவி, ஆன்மா, உயிர்த் தத்துவங்களே தமிழ்மொழி, இனம், நாடு காப்பவை!

குருவழிக் கல்வியே அனைத்துத் திருநிலைகளையும் விளைவிக்கும்!

<u>தொடர்பு</u>:-

i. பெரியவாள், அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் சன்னிதானம் மு.இராமானுசதாசு, 12 காந்திபுரம் 5ஆம் வீதி, காரைக்குடி.

ii. பரமாச்சாரியார் நெ.சேவுகன் C/O காதிவசுத்திராலயம் GRNS கொட்டாம்பட்டி, மதுரை-625103.

iii. பிறமாச்சாரியார் சி.கவிக்குமார் 56 NGO காலனி, பொன்னேரி-601204.

iv. தெய்வீகாச்சாரியார் சோ.இரவீந்திரன், C/O சித்தர், ESI, செம்பியம், சென்னை-600011.

**<u>குறிப்பு</u>**:- இல்லங்களுக்கும் 48 வகையான வழிபாட்டு நிலையங்களுக்கும் (கோயில்களுக்கும்) புத்துயிர்ப்புக்குரிய ஏந்தரீக, மாந்தரீக, தாந்தரீகச் சக்கரங்கள் வழங்கப்படும்.

ஆண்டுச் சந்தா ரூ.15 செலுத்தி ‘குருதேவர்’ ஏடு படியுங்கள். ‘குருதேவர்’ ஏட்டின் வளவளர்ச்சிக்காக தாராளமாக நிதி வழங்குங்கள்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: இத்துடன் அனுப்பப்பட்ட காரைக்குடி இராமானுசதாசுவிற்கு எழுதிய அஞ்சல் சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. அறிவிக்கை யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# ஞானாச்சாரியார் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூராரின் மதுரை வருகை 20.9.85 முதல் 23.9.85 வரை.

1. மனிதனைக் கடவுளாக உயர்த்தும் **மெய்யான இந்துமதம்** பற்றியும், கடவுளை மனிதனாகத் தாழ்த்தும் *பொய்யான ஹிந்துமதம்* பற்றியும் புரியலாம்.

2. பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்**தான் தன்மானம், இனமானம், இன ஒற்றுமை, மொழியுரிமை, ... தழைக்கச் செய்யும்.

3. **மெய்யான இந்துமத** வழிச் சிந்தனையும், செயலுமே அனைத்து வகையான மிடிமை, அடிமை, ஏமாற்று, சுரண்டல், அவமானம், அவலக் கேவலம் ... முதலியன அனைத்தையும் அகற்றும்.

4. தன்னையறிந்து தலைவனைப் புரிந்து தன்னிறைவு வாழ்வு வாழத் தமிழ் வழி மெய்யான இந்துமத வாழ்வு வாழ்ந்திடுக!

5. சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் கூறுபாடுகளில் அன்னிய இருளகன்றிட **மெய்யான இந்துமத** ஆதவன் ஆயிரமாயிரம் தத்துவச் சித்தாந்த ஞானக் கதிர்க் கற்றைகளைப் பரப்பியேயாக வேண்டும்.

6. அருளுலக இருளனைத்தும் அகன்றிட இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூராரின் அருளையும், அருளுரையையும் பெற்றிடுக.

7. அனைத்து நலிவு, மெலிவுகளுக்கும், அருட்கொடையால் நலம் பெறுக.

1. பரமாச்சாரியார் நெ.சேவுகன், C/O காதி வசுத்திராலயம் G.R.N.S., கொட்டாம்பட்டி - 625103.

2. பிறமாச்சாரியார் சி.கவிக்குமார், 56, N.G.O.காலனி, பொன்னேரி-601204.

3. தலைமைப்பீடம், சித்தர் கருவூரூர், E.S.I., திரு வி.க.நகர், செம்பியம், சென்னை-11.

தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி ஒன்று திரட்டுவது அரசியல் கட்சிகளாலோ! இலக்கிய வாதிகளாலோ! ... முடிவுற்று நிறைவு பெறக் கூடிய ஒன்றல்ல. அனைத்துக்கும் கருவாக, உருவாக, திருவாக உள்ள மதத்தால்தான் தமிழ்மொழி உணர்வு, இன உணர்வு, ஒற்றுமையுணர்வு ... முதலியவைகளைக் கிளர்ச்சிமிகு வளவளர்ச்சி பெறச் செய்ய முடியும்.

**அன்பு**

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்,**

**18.8.85.**

8.10.85 அன்று குருதேவர் நாட்குறிப்பு ஏட்டிலிருந்து நகலெடுத்தவர்: வேலூர் சுடலை ஈசுவரி சன்னிதானம் பிச்சைமணி.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு பிச்சைமணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அருளாட்சி அமைக்க அறைகூவல் விடுக்கும் இந்து மறுமலச்சி இயக்கம் பற்றிய விளக்கம்

1. இந்து மறுமலர்ச்சி இயக்கம் இந்து மதத்திற்கு மட்டும் சொந்தம் அல்ல. "இந்து" என்ற சொல் அனைத்து மதங்களையும் குறிக்கும்.

2. சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்த பகுத்திறவுப் பாசறையே இந்துமதம் என்கிற சித்தர் நெறி.

3. **மெய்யான இந்து மதம்** உலகச் சமத்துவ சகோதரத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கவே விரும்புகிறது. இது உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு பாடுபடுகிறது.

4. அனைத்தையும் அற வழியில், அன்பு வழியில், சமாதான முறையில்தான் சாதிக்க வேண்டும்.

5. மெய்யான மதவாதி எதையும் குறைத்தோ, மறைத்தோ யாரையும் வெறுத்தோ அன்றி மறுத்தோ செயல்படவே கூடாது.

**//1986இல் ஒரிசா சுற்றுப்பயணத்திற்காக அச்சிடப்பட்ட அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூர்ரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் புதுமை விரும்பி, புரட்சிச் சிந்தனையாளர், சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகலவன், அறியாமை இருளகற்றும் ஆதவன், சிறந்த வரலாற்றுப் பேராசிரியர், புதிய அரசியல் தத்துவங்களை உருவாக்கிய அரசியல்வாதி, தீவிரமான சமுதாயச் சீர்திருத்தவாதி, சமயத்தின் பெயரால் உள்ள மடமைகளைச் சாடிடும் துணிவு மிக்க புரட்சிவாதி; போர்க்கலையில் திறமையும், உடல் வலிமையும் மிக்க மாவீரர், ...”

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூர்ரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org